ந.க.எண். 40/2010

பாலப்பள்ளம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்
நாள் : 04.06.2010

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011

## ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டம் பாலப்பள்ளம் பேரூராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010 – 2011 ம் வருடத்தின் கீழ் பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும் . ஒப்பந்தகாரர்கள் மத்திய அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களாக இருக்க வேண்டும் .
2. பாலப்பள்ளம் பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தகாரர்கள் மூலம் ஒப்பந்தபுள்ளிகளை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.
3. பணிகளுக்குரிய ஒப்பந்த படிவங்கள் 04.06.2010 தேதி முதல் 17.06.2010 வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை பாலப்பள்ளம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் , பாலப்பள்ளம் பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம் . ஒப்பந்தப்படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ . 200/– செலுத்த வேண்டும் . தபால் வழி தாமதங்களுக்கு பாலப்பள்ளம் பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது .
4. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர் , பாலப்பள்ளம் பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும் .
5. ஒப்பந்தப்புள்ளிகளை பாலப்பள்ளம் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 18.06.2010 தேதி வெள்ளிக்கிழமை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும் . வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பாலப்பள்ளம் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.
6. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | டேவணித் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை ( ரூ ) | பணி முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2010–2011** | | | | |
| 1 | பாலப்பள்ளம் பேரூராட்சி சகாயநகரில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்து நீரேற்று குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதித்தல். ( ஆதிதிராவிடர் பகுதி ) | 16.00 | ரூ.32000/– | 6550 | 6 மாதம் |
| | **மொத்தம்** | **16.00** | | **6550** | |

**நிபந்தனைகள்**
**——————————**

1. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்க வேண்டும் .
2. ஒப்பந்தகாரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் போது ஒப்பந்தகாரர்களின் நிதி நிலைமை பொருளாதார நிதி நிலைமை குறித்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் .

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

1. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு துறையில் குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திர நிதி செயல் திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கப்பட வேண்டும் .
2. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருள்களையும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் தரமானதாக வாங்கி பயன்படுத்த வேண்டும். அவ்வாறு வாங்கப் படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தை குறித்த தேவையான சான்று சமர்பிக்கப்பட வேண்டும்.
3. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி நமூனாவிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரங்களில் பேரூராட்சி பொறியாளரின் ஆலோசனைகளைப் பெறலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு ஆணை வழங்கப்படும்.

5. மேற்கண்ட பணிகள் நடைபெறும் போது சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும் .

6. பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சம் அபராத தொகை விதிக்கப்படும் .

செயல் அலுவலர்
பாலப்பள்ளம் பேரூராட்சி

பெறுபவர்

அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்
பாலப்பள்ளம் பேரூராட்சி

நகல்

1. கிள்ளியூர் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகள்
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், நாகர்கோவில் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்பிக்கப்படுகிறது .
3. இளநிலை பொறியாளர் , பேரூராட்சிகள் , திங்கள் நகர் ( இ ) .
4. கிராம அலுவலகம் , கீழ்மிடாலம் கிராமம் .
5. தலைவர் , பாலப்பள்ளம் பேரூராட்சி தகவலுக்காக.
6. விளம்பர பலகை .

**Visit Us :**

1. http://www.tenders.tn.gov.in
2. http://townpanchayats.tn.gov.in/tender

மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியிலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.